3

T3
D-13x
N23
178924

# தாளில்லாக் கதவு

4 APR 1922

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1922

[விலை 2 அணா

TB
O-,3x
N22
128924

178929
-600 008.

Printed at
The 'Caxton Press,'
Madras, E.

170.[1]
126
4- APR 1922
178924

## 1. தாளில்லாக் கதவு

மாவண்டூரில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுடைய வீட்டை யடுத்து வயல்களும் வெளி நிலங்களும் காடுகளும் இருந்தன. வீட்டுக்குப் பின்புறத்தில் பெரிய கொல்லை இருந்தது. அந்தக் கொல்லையைச் சுற்றிலும் சுவர் எழுப்பி ஒரு சிறிய வாசற்படி வைத்திருந்தான். அந்த வாசலுக்குக் கதவு உண்டு; ஆனால், அதற்குத் தாழ்ப்பாள் இல்லை.

2. அவன் தன்னுடைய பசுக்கள், எருதுகள், எருமைகள், ஆடுகள், கோழிகள் முதலியவைகளை யெல்லாம் கொல்லையில் அடைத்து வைத்திருந்தான். கொல்லைக் கதவுக்குத் தாழ்ப்பாள் இல்லாததனால் அதனைக் கெட்டியாகச் சாத்தி வைத்திருக்க முடிவதில்லை. ஆடு மாடுகள் அந்த வாசலின் வழியாக வெளியே போகாதிருக்கும் பொருட்டு, அவன் அந்தப் பக்கம் போகும்பொழுதெல்லாம் கொல்லைக் கதவைப் பிதியச்

சாத்தி வருவான். ஆனல், மற்றவர்கள் அவனைப்போல அவ்வளவு ஜாக்கிரதை-யாக இருப்பதில்லை.

3. அவன் எவ்வளவு கவனமாகச் சாத்தி வைத்தாலும், காற்றடித்தால் அந்தக் கதவு திறந்துபோம். ஆதலால், சாதாரணமாக அந்தக் கதவு முன்னும் பின்னும் காற்றில் அசைந்து கொண்டிருக்கும்; இல்லா விட்-டால், திறந்து நிற்கும். இப்படி யிருந்த-தனல், அவனுடைய கோழிகள் முதலியன அடிக்கடி வெளியே ஓடிப்போகும்; மற்ற-வர்களுடைய ஆடு மாடுகள் வந்து கொல்-லைக்குள் இருக்கும் புல் முதலியவற்றைத் தின்றுபோம்.

4. வெளியே ஓடிப்போன கோழிக் குஞ்-சுகளைக் கொல்லைக்குள் ஓட்டுவதும், ஊரா-ருடைய ஆடுமாடுகளைக் கொல்லையினின்று வெளியே துரத்துவதுமே அவனுடைய குழந்தைகளுக்கு எப்பொழுதும் பெரிய வேலையாக இருந்தது. ஆதலால், அந்தக் கதவுக்கு ஒரு தாழ்ப்பாள் போடவேண்டு மென்று குடியானவனுடைய மனைவி அடிக் கடி சொல்லுவாள்.

5. ஆயினும், குடியானவன் அதற்குத் தாள்போடமாட்டான். "தாழ்ப்பாள் போடு

வதற்குக் கால் ரூபாய் வேண்டுமே, அந்தச் செலவு ஏன் செய்ய வேண்டும்? குழந்தைகள் சும்மா இருக்கிறார்களே. அவர்களுக்கு வேலை என்ன? வெளியே ஓடுகிற கோழிக் குஞ்சுகளைக் கொல்லைக்குள் ஓட்டுகிற காரியத்தையும், ஊர் மாடுகளை வெளியே துரத்துகிற காரியத்தையும், அவர்கள் பார்க்கட்டுமே" என்று அவன் மனைவிக்குப் பதில் சொல்லுவான். ஆதலால், அந்தக் கதவு தாழ்ப்பாளில்லாமலிருந்தது.

6. ஒரு நாள் அவனுடைய கொல்லையிலிருந்து ஒரு பசுவின் கன்று கதவைத் திறந்து தள்ளிக்கொண்டு, வெளியிலுள்ள வயல்களைக் கடந்து, காட்டுக்குள் ஓடிப்போய்விட்டது. கொல்லைக்குள் அந்தக் கன்று இல்லையென்று சிறிது நேரம் கழித்துத் தெரிந்துகொண்டு குழந்தைகள் கூச்சலிட்டார்கள்.

7. அந்தச் சமயத்தில் குடியானவன் ஒரு குதிரையைக் கொண்டுவந்து கொல்லையிற் கட்டிக்கொண் டிருந்தான். கன்றைக் காணவில்லை என்னுங் கூச்சல் கேட்டவுடனே, அவன் குதிரையைக் கட்டாமல் அப்படியே விட்டுவிட்டுக் கன்றைத் தேடிக்கொண்டு ஓடினான்.

8. அருகி லிருந்த வாய்க்காலில் அவனுடைய மனைவி சீலைகளைத் துவைத்துக்கொண்டிருந்தாள். தன் கணவன் ஓடுவதைக் கண்டு, அவள் சீலைகளை அப்படியே போட்டுவிட்டு அவன் பின்னால் ஓடினாள்.

அவர்களுடைய பெண் அடுப்பிற் சோறு சமைத்துக்கொண்டிருந்தாள். தாயும், தகப்பனும் ஓடுகிறார்களென்று கேட்டு, அவள் சோற்றை அடுப்பின் மீதே கொதிக்கவிட்டு, அவர்கள் பின்னால் ஓடினாள்.

9. அவர்களுடைய பிள்ளைகளும், வேலையாளும் கன்றைத் தேடிக்கொண்டு ஓடி, அவர்களைப் போய்ச் சேர்ந்தார்கள். எல்லாருமாகக் கூடிக் குழப்பமாக மேலுங்கீழும் விழுந்து, அவசரப்பட்டுக் காட்டுக்கு ஓடினார்கள்.

10. வழியில் ஒரு வேலியைத் தாண்டிக் குதிக்க வேண்டி யிருந்தது. வேலைக்காரன் அவசரப்பட்டு, அசட்டுத்தனமாகக் குதித்ததில், அவனுடைய கால் சுளுக்கிக்கொண்டது. அவன் அடி யெடுத்து வைத்து நடக்க முடிய வில்லை. ஆதலால், குடியானவனும், பிள்ளைகளும் கன்று தேடுவதை விட்டு, அவனைத் தூக்கி வீட்டுக்குத் திருப்பிக் கொண்டுவந்து சேர்க்க வேண்டிய-

தாயிற்று. வீட்டுக்குப் போனபிறகு அந்த வேலையாளுக்கு உபசாரங்கள் செய்து அவனுக்கு நோவாற்றும் பொருட்டுக் குடியானவனுடைய மனைவியும் மகளும் திரும்பி வந்தார்கள்.

11. அவர்கள் வீட்டுக்குத் திரும்பிவந்து பார்க்கையில், குடியானவனுடைய மனைவி துவைத்துக் கொண்டிருந்த நல்ல விலையுயர்ந்த சீலைகள் இரண்டையும் வாய்க்கால் அடித்துக் கொண்டு போயிற்று. சீலைகள் அகப்படவில்லை. அடுப்பிலிருந்த சோறு அதிகப் பக்குவமாகி உபயோகப் படாமற் போயிற்று.

12. அஜாக்கிரதையினுற் சீலைகளைப் போக்கடித்ததற்காக மனைவியையும், சோற்றைப் பாழாக்கியதற்காக மகளையுங் குடியானவன் கோபித்துக்கொண்டு வீட்டுக் கொல்லைப்புறத்திற் போய்ப் பார்த்தான். அங்கே அவன் கட்டாமல் விட்டுப்போன குதிரை ஒரு பசுவை உதைத்து, அதன் காலை நொண்டியாக்கி யிருந்தது. வேலைக்காரன் காற்சுளுக்கினுல் ஒரு வாரம் வரையில் வருந்திக் கொண்டு கிடந்தான்.

13. இவ்விதமாகக் குடியானவன் கால் ரூபாய் செலவுசெய்து கொல்லைக் கதவுக்குத்

தாள் போடச் சோம்பியதனுல், அவனு-டைய வேலைக்காரனுக்குக் கால் சுளுக்கிக்-கொண்டது. அவன் செய்யக் கூடிய ஒரு வாரத்து வேலை குடியானவனுக்கு நஷ்டம்; ஒருகன்று நஷ்டம் ஒரு பசுவின் கால் ஊன-மானது ஒரு நஷ்டம்; இரண்டு நல்ல சீலை-கள் நஷ்டம்; சோறு கெட்டுப்போனது ஒரு நஷ்டம்; — இத்தனை நஷ்டங்களும் ஒரு கால்ரூபாய் செலவழியாததனுல் விளைந்தன.

14. அற்பகாரியம் செய்வதற்குச் சோம்-புவதனுல் பெரிய நஷ்டம் உண்டாகும் என்-பதை உணர்த்துவதற்காக, "காணிச் சோம்-பல் கோடிக்கேடு" என்னும் பழமொழி ஏற்-பட்டது.

## ௨. நேரம் தப்பாதே

கோபாலன் என்றும், ராஜா என்றும் இரண்டு பிள்ளைகள் சென்னபட்டணத்தைச் சேர்ந்த ராயப்பேட்டையிலுள்ள பள்ளிக்-கூடத்திற் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் கோபாலன் என்பவன் பள்ளிக்-கூடத்திற்கு நேரங்கழித்துப் போவான். அதாவது, பள்ளிக்கூடம் பதினொருமணிக்கு ஆரம்பித்தால், அவன் பதினென்றேகால் மணிக்குப் போய்ச் சேருவான்.

2. அவன் தினந்தோறும் நேரஞ் சென்று வருவதைப்பற்றி உபாத்தியாயர் மிகவும் வருத்தப்படுவார். அவன் வந்து தன் இடத்தில் உட்கார்ந்து கொள்கிறவரை-யில் பாடம் சொல்லாமல் அவர் சும்மா இருப்பார். அப்படி அவன் காலம் தப்பி வருவது தவறென்று அவர் அவனுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்.

3. ஒருநாள் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வருகையில், கோபாலன் தன் தோ-ழனுகிய ராஜாவைப் பார்த்து அந்த விஷ-யமாகப் பேசத் தொடங்கினுன் :—

கோபாலன் — சிறிது நேரம் கழித்துப் போனுல் உபாத்தியாயர் மிகவும் கோபித்-துக் கொள்கிருரே ; பாடத்தை நிறுத்தி விடுகிருர், முகத்தைச் சுளித்துக் கொள்கி-ருர், அது தவறு என்கிருர். அதனுல் என்ன முழுகிப்போயிற்று? பத்து நிமிஷம் பொறுத்துப் பள்ளிக்கூடத்திற்குப் போவ-தனுல் என்ன கெடுதி ?

ராஜா — நேரஞ் சென்று பிள்ளைகள் பள்ளிக் கூடத்திற்கு வருவது நமது உபாத்-தியாயருக்குப் பிரியமில்லையென்பது எனக்-குத் தெரியும். அவரைச் சந்தோஷப்படுத்த

வேண்டியது நம்முடைய கடமை யென்று நினைக்கிறேன்.

கோபாலன் — நல்லது ; அவரைச் சந்தோஷப் படுத்துகிற சங்கதி அப்படி இருக்கட்டும். நேரங் கழித்துப் பள்ளிக்கூடத்திற்குப் போவதனால் என்ன கெடுதி இருக்கிற தென்பது எனக்குத் தெரிய-வேண்டும்.

ராஜா — நமது உபாத்தியாயர் சொல்லுகிற நியாயம் எனக்குத் தெரியும். எது நல்லது எது கெட்டது என்பது நம்மை விட அவருக்கு நன்றாகத் தெரியு மல்லவா? அவர் நம்மிடத்து மிகுந்த அன்பு பாராட்டுகிறார்; ஆதலால், நம்முடைய நன்மையைக்-கருதியே நாம் சரியான வேளையிற் பள்ளிக்-கூடத்திற்கு வர வேண்டுமென்று சொல்லு-கிறார் என்று நினைக்கிறேன்.

கோபாலன் — நேரங் கழித்து வருவ-தைப்பற்றி அவர் என்ன சொல்லுகிறார் ? அது கூடாதென்பதற்கு நல்ல காரணம் ஏதாவது இருக்குமானால், அதனை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ராஜா — அது அனேக விதங்களிற் கெட்ட வழக்கமென்று அவர் சொல்லு-கிறார். நாம் கால் மணி நேரம் பிந்திப்

போவதனுல், அந்தக் கால் மணி நேரத்தில் நடந்த பாடம் நமக்கு நஷ்டமே யல்லவா? அப்படித் தினந்தோறும் கால் மணிப் பாடம் போனுல், மாதத்திற்கு எவ்வளவு நஷ்டம்?

கோபாலன் — அதனைத் தவிர வேறு காரணம் உண்டோ?

ராஜா — பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளெல்லாரும் ஒழுங்காக உட்கார்ந்து பாடங் கேட்டுக்கொண் டிருக்கையில், நாம் நேரஞ் சென்று போய் நம்முடைய இடத்தைத் தேடி உட்காருவதில் பள்ளிக்கூடத்து அமைதி கெடுகின்றது. உபாத்தியாயரும், பிள்ளைகளும் நம்மையே பார்த்துக்கொண்டிருக்கவேண்டியதாகிறது.

கோபாலன் — அது சரியான காரணம். இன்னும் ஏதாவது உண்டோ?

ராஜா—ஒரு பையன் நேரம்பொறுத்து வருவதனுல் இவ்வளவு கெடுதி யுண்டாகிறது. எல்லாப் பிள்ளைகளும் நேரங் கழித்து அவரவர்களுடைய இஷ்டப்படி வருவதானுல், பள்ளிக்கூடம் என்ன ஆகும்? பள்ளிக்கூடத்தில் ஒழுங்கே இராது, எல்லாம் குழப்பமாக இருக்கும், பாடமே நடவாது. இதுவல்லாமல், பள்ளிக்கூடத்திற்கு நேரங்

கழித்துப் போகும் வழக்கம் ஏற்பட்டால், எல்லாக் காரியங்களிலும் பிந்துவதே நமக்கு வழக்கமாகும்; அந்த வழக்கம் நம் ஆயுள் பரியந்தம் நம்மை விடாது.

கோபாலன் — இவ்வளவு நல்ல காரணங்கள் இருக்கின்றனவென்பது இதற்கு முன்னால் எனக்குத் தெரியாது. உபாத்தியாயர் சொல்வதே சரியென்பது நிச்சயமாகத் தோன்றுகிறது. ஒரு நாட் காலையில் நான் நேரங்கழித்து வந்தபோது, பையன்களெல்லாரும் என்னையே திரும்பிப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். என் இடத்திற்குப் போய் நான் உட்காருகிற வரையில் உபாத்தியாயர் பையன்களைக் கேள்வி கேட்காமற் சும்மா இருந்தார். இவையெல்லாம் எனக்கு ஞாபகத்திலிருக்கின்றன.

ராஜா — ஆம், அன்றைக்கு நடந்த வர்த்தமானம் எனக்கும் ஞாபகமிருக்கிறது. இனியாவது நீ நேரஞ் சென்று வராமல் கிரமமான வேளையிற் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டுமென்று நான் அன்றைக்கு நினைத்தேன். அது கெட்ட வழக்கமென்று நினைக்கிறேன். பள்ளிக்கூடத்திற்கு நேரஞ் சென்று போகிற வழக்கம் ஏற்பட்டால், மற்ற இடங்களுக்கும் நேரங் கழித்துப் போகும் வழக்கமே வரும். "நேரங் கழித்-

துப் போகக்கூடாது'' என்பதே எனது கொள்கை. நீயும் இந்தக் கொள்கையை மேற்கொள்வாய் என்று கோருகிறேன். நீ என்ன சொல்லுகிருய்?

கோபாலன் — நல்லது. நீ சொல்வ-தெல்லாம் நியாயமாக இருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி இதற்கு முன்னுல் நான் இவ்வளவு தூரம் ஆலோசித்துப் பார்க்க-வில்லே. இது முதல் உனது கொள்கை-யையே நான் கைக்கொள்கிறேன். இனிச் சரியான வேளேயிற் பள்ளிக்கூடத்திற்குப் போக முயற்சி செய்கிறேன்.

ராஜா — அதுதான் சரி. இனி நம் பள்ளிக்கூடத்துப் பிள்ளேகளெல்லாரும் இந்தக் கொள்கையை அனுசரிக்கும்படி செய்வோம்.

## 3. நத்தை கற்பித்த நற்பாடம்

ஒரு கிராமத்துச் சிறு பள்ளிக்கூடத்தில் "ஆத்திசூடி'' என்னும் நூல் பாடம் நடந்து வந்தது. "ஆத்திசூடி'' முழுவதையும் தவ-ருமல் ஒப்பிப்பவனுக்கு நல்ல இனும் கொடுப்பதாக உபாத்தியாயர் சொல்லியிருந்-தார்.

2. அந்த இனம் பெறுவதற்குச் சில பிள்ளைகள் போட்டி போட்டுக் கொண்டார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் கோவிந்தன் என்றொரு பையன் நின்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்து மற்றவர்கள் "நீ இந்தப்போட்டிக்கு வராதே, உன்னால் படித்து ஒப்பிக்க முடியாது" என்று சொன்னார்கள்.

3. அந்த வார்த்தையைக்கேட்டு அவன் வருத்தப் பட்டுக் கொண்டு வீட்டுக்குப் போனான். அந்தப் பாடத்தைப் படித்து ஒப்பிக்கவேண்டுமென்று அவனுக்கு ஆசை இருந்தது. ஆதலால், அவன் புத்தகத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு தெருத் திண்ணையில் உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தான். அவனுக்குப் பாடம் வராதென்று மற்றப் பையன்கள் சொல்லிய வார்த்தை அவனுக்கு ஞாபகம் வந்தது.

4. அந்த ஞாபகத்தின் மீது அவன் அழுது கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் பக்கத்து வீட்டு மீனாக்ஷி என்னும் மாது வெளியே வந்தாள். அவன் புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு அழுவதைக் கண்டு அவள் "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாள்.

5. அதற்குக் கோவிந்தன், "ஆத்தி-சூடியைப் படித்து ஒப்பிக்கவேண்டும். நன்-ருக ஒப்பிக்கிறவனுக்கு இனும் கொடுப்ப-தாக உபாத்தியாயர் சொல்லி யிருக்கிருர். ஆனல், என்னல் படிக்க முடியாதென்று தோன்றுகிறது" என்று பதில் சொன்னன்.

6, "உன்னல் ஏன் படிக்க முடியாது?" என்று மீனுக்ஷி கேட்டாள். "என்னல் படிக்கமுடியாது, நான் பிரயத்தனம் செய்ய வேண்டாமென்று மற்றப் பையன்கள் சொல்-லுகிருர்கள்" என்று கோவிந்தன் விசனத்-தோடு பதில் சொன்னன்.

"பையன்கள் சொல்லுகிற வார்த்-தையை நீ கவனியாதே. நீ அந்தப் பாடத்-தைப் படிக்க முடியு மென்று அவர்களுக்குக் காட்டு" என்ருள் மீனுக்ஷி.

7. "ஆனல், என்னல் முடியாதென்று தோன்றுகிறதே. அது பெரிய பாடமாக இருக்கிறது ; அதனில் புதிய வார்த்தைக-ளும் இருக்கின்றன. இனும் பெறுவதற்குப் போட்டி செய்ய வேண்டாமென்பது எனக்-குத் தெரியும். ஆயினும், அந்தப் பாடத்தை நன்ருகப் படித்து வைக்க விரும்புகிறேன் ; ஏனெனில், நான் பாடம் ஒப்பிக்கும் பொழுது மற்றப் பையன்கள் என்னைப்

பார்த்துச் சிரித்து, 'மந்திக் கோவிந்தன்' என்கிறார்கள்'' என்று அவன் பதில் சொன்னான்.

8. "நல்லது, கோவிந்தா! நீ கொஞ்சம் மந்தமாக இருந்தாலென்ன? ஒரு முறை படிப்பதைப் பத்து முறை படித்தால், அது மனத்தில் நன்றாகப் பதியும்; பிறகு அது மறவாது. அது உறுதியான படிப்பு; தீவிரமாகப் படிக்கிறவர்களுக்கு அவ்வளவு உறுதியாக இராது. ஆதலால், மெதுவாகப் படிப்பதே நல்லது. மெல்ல மெல்ல நடந்தால், வெகு தூரம் நிச்சயமாக நடக்கலாம். அதோ! அந்தச் சுவரின் மீது இருக்கிற நத்தையைப் பார். அது எவ்வளவு மெதுவாக நகர்கிறது! ஆயினும், அதனைக் கவனித்துப் பார்த்தால், அது கொஞ்சங் கொஞ்சமாக நடந்து உச்சிக்குப் போய்விடுவதைக் காணலாம். அது போல, தினந்தோறும் நாலு வரி படித்துக் கெட்டிப்படுத்திக்கொள். சில நாளையில் பாடம் முழுவதையும் படித்துக்கொண்டு, முடிவில் நீ வெகுமதியும் பெறுவாய். தைரியமாகப் படி; தைரியம் குறையுமானல், சுவரின்மீதுள்ள அந்த நத்தையை ஞாபகப்படுத்திக்கொள்'' என்று மீனாக்ஷி அன்புடன் புத்திசொன்னாள்.

9. அந்த வார்த்தைகளைச் சொல்லிய பிறகு, மீனாக்ஷி போய்விட்டாள். "பாடம் படிப்பதில் பள்ளிக்கூடத்துப் பையன்களோடு போட்டி செய்ய முடியாவிடினும், அந்த நத்தையோடு பந்தயம் போட்டுக் கொள்ளலாம்; அது சுவரின் உச்சிக்குப் போய்ச் சேருவதற்குள்ளாக நான் பாடத்தைப் படித்து விடவேண்டும்" என்று கோவிந்தன் தீர்மானம் செய்துகொண்டான். அது முதல் அவன் தினந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாகப் படித்து வந்தான்.

10. அப்படி யிருக்கையில், வெகுமதி கொடுப்பதற்காக உபாத்தியாயர் குறிப்பிட்ட தினம் வந்தது. அவர் பையன்களெல்லாரையும் அழைத்து, "ஆத்திசூடி" ஒப்பிக்கச் சொன்னார். ஐந்து ஆறுபேர் ஒப்பித்த பிறகு, கோவிந்தனுடைய முறை வந்தது.

11. அவன் பாடம் ஒப்பிப்பதற்கு எழுந்த வுடனே பையன்க ளெல்லாரும் சிரித்தார்கள்; ஏனெனில், அவன் தவறுவானென்று அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால், அவன் ஒரு வார்த்தையும் பிசகவில்லை. "நன்றாக ஒப்பித்தாய், கோவிந்தா!" என்று உபாத்தியாயர் சொல்லிய வுடனே அவனுக்குச் சந்தோஷம் பொங்கியது.

12. பிறகு, உபாத்தியாயர் மற்றப் பிள்ளைகளையும் பாடம் ஒப்பிக்கச் சொன்னார். முடிவில், மற்றெல்லாரையும்விடக் கோவிந்தனே நன்றாக ஒப்பித்தானென்று சொல்லி உபாத்தியாயர் அவனுக்கு வெகுமதி கொடுத்தார்.

13. அந்த வெகுமதியைப் பெற்றுக் கொண்டு கோவிந்தன் வணக்கமாக நின்றான். அப்பொழுது, அவனைப் பார்த்து, "நீ இவ்வளவு நன்றாக எப்படிப் பாடம் படித்தாய்?" என்று உபாத்தியாயர் கேட்டார்.

அதற்குக் கோவிந்தன், "ஐயா! என் வீட்டுச் சுவரின் மீது ஒரு நத்தை இருந்தது. அது எனக்குப் பாடம் படிக்கக் கற்றுக் கொடுத்தது" என்றான்.

14. அந்த வார்த்தையைக் கேட்டவுடனே, பையன்களெல்லாரும் 'கல்' எனச் சிரித்தார்கள். அப்போது உபாத்தியாயர், 'பிள்ளைகளே! சிரியாதேயுங்கள். ஏனெனில், நத்தை முதலிய பிராணிகளிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்குணங்கள் பல உண்டு.—கோவிந்தா! உனக்கு நத்தை எப்படிக் கற்பித்தது? அந்த விவரத்தைச் சொல், கேட்போம்" என்றார்.

15. "ஐயா! அது சுவரில் ஊர்ந்து செல்வதைக் கண்டேன். அது நிற்கவுமில்லை, திரும்பிப் பார்க்கவுமில்லை; மேலும் மேலும் ஊர்ந்து சென்று கொண்டேயிருந்தது. நானும் என்பாடம் படிப்பதில் அப்படியே செய்யலாமென்று நினைத்தேன். அதுமுதல் கொஞ்சங் கொஞ்சமாகப் படித்தேன்; படியாமல் நிறுத்தவேயில்லை. அந்த நத்தை சுவரின் உச்சிக்குப் போய்ச் சேர்ந்த போது, நானும் என் பாடம் முழுவதையும் படித்துவிட்டேன்" என்று கோவிந்தன் சொன்னான்.

16. "நன்றாகச் செய்தாய், கோவிந்தா! உன்னை 'மந்திக் கோவிந்தன்' என்று பரிகாசம் செய்து கொண்டிருந்த பிள்ளைகளெவரும் உன்னைப்போல நன்றாகப் பாடம் ஒப்பிக்க வில்லை. அவர்கள் சீக்கிரத்திற் பாடம் படித்து விடுகிறோமென்றும், தமக்குத் தீவிரபுத்தி இருக்கிறதென்றும் நினைத்துச் சரியாகப் படியாமல் ஏமாறிப் போனார்கள். நீயோ, உன் புத்தி மந்தம் என்று நினைத்து நிதானமாகப் படித்து நிச்சயமாகப் பாடத்தைச் சாதித்து வெகுமதி பெற்றாய். நிதானமாக விடாமுயற்சி செய்தால், எதனையும் நிச்சயமாகச் சாதிக்கலாம் என்னும் நற்பாடத்தை உனக்கு நத்தை

கற்பித்தது. உன்னைப் பார்த்து மற்றப்பிள்ளைகள் கற்றுக்கொண்டு கடைத்தேறுவார்களாக."

என்று உபாத்தியாயர் கோவிந்தனைக் கொண்டாடி, மற்றவர்களுக்குப் புத்தி புகட்டினார்.

## 4. பேராசை பெரு நஷ்டம்

துருக்க வியாபாரி ஒருவன் இருநூறு பொன் பணம் அடங்கிய பை ஒன்றை இழந்துவிட்டான். அது காணுமற் போயிருப்பதாகவும் அதைக் கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு அதனிலுள்ள பணத்திற் பாதி கொடுப்பதாகவும் அவன், ஊர் முழுதும், பறையறைவித்தான்.

2. அந்தப் பையைக் கண்டெடுத்த மாலுமி ஒருவன் பறையறைவோனிடத்திற் போய்த் தான் அதைக் கண்டெடுத்திருப்பதாகவும், சொந்தக்காரன் விளம்பரப்படுத்தியபடி நடப்பித்தால், அதைக் கொடுப்பதாகவும் தெரிவித்தான். பையைக் கண்டெடுத்தவன் இன்னவனென்று தெரிந்து கொண்டபிறகு அந்த வர்த்தகன் அவனுக்கு ஒன்றும் கொடாமலே அதைப்

பெற்றுக்கொள்ளவேண்டுமென்று நீசபுத்தி-கொண்டான்.

3. அவன் மாலுமியைப் பார்த்து, "நான் கொடுப்பதாகச் சொல்லிய வெகுமதி உனக்கு வேண்டுமானால், அந்தப் பைக்குள் வைத்திருந்த விலையுயர்ந்த மரகதக் கல்லை-யும் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்" என்றான். "அந்தப் பையில் பணத்தைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை. எனக்கு வெகுமதி கொடுத்தா லல்லாமல் அந்தப் பையைத் திருப்பிக் கொடுக்கமாட்-டேன்" என்றான் மாலுமி.

4. அந்த ஊரில் நியாயாதிகாரியாகிய காதியினிடத்தில் வர்த்தகன் பிராது செய்-தான். காதி அந்த மாலுமியை வரவழை-த்துப் பணப்பையைத் திருப்பிக்கொடா-திருக்கக் காரணம் என்னவென்று கேட்-டார். அதற்கு மாலுமி, "நூறு பொன் நாணயம் வெகுமதியாகக் கொடுப்பதாக அந்த வர்த்தகன் வாக்களித்திருந்தான். இப்போது அதைக் கொடுக்க மாட்டே-னென்கிறான். அதற்குச் சாட்டாக அந்தப் பையில் விலையுயர்ந்த மரகதம் ஒன்று வைத்-திருந்ததாகச் சொல்லுகிறான். அந்தப் பணத்தைத் தவிர வேறு ஒன்றையும் நான்

பையில் காணவில்லை. இது சத்தியம்'' என்றான்.

5. பிறகு, அந்த மரகதம் எப்படிப்பட்டது, அது அவனிடத்தில் எப்படி வந்தது என்னும் விவரங்களைச் சொல்லும்படியாகக் காதி வர்த்தகனைக் கேட்டார். அவன் அதன் வரலாற்றையும் விவரத்தையும் சொல்லுவதில் மிகக் குழப்பமுற்றதனால், அவனுடைய அயோக்கியதை வெளிப்பட்டது.

6. அதன்மீது வர்த்தகனைப் பார்த்து, "இரு நூறு பொன் நாணயமும், விலையுயர்ந்த மரகதம் ஒன்றும் அடங்கிய பை உனக்குக் காணமற் போயிற்று; மாலுமியோ இரு நூறு பொன் நாணயங்கள் மாத்திரம் உள்ள பை ஒன்றைக் கண்டு எடுத்திருக்கிறான்; ஆகையால், இந்தப் பை உன்னுடையதாக இருக்கமாட்டாது. உன்னுடைய பையைப்பற்றி, அதில் இருந்ததாகச் சொல்லுகிற மரகதத்தின் விவரத்தையும் வெளியிட்டு, நீ மறுபடி பறையறைவிக்கவேண்டும்'' என்று காதி தீர்ப்புச் சொல்லிவிட்டார்.

7. பிறகு மாலுமியைப் பார்த்து, "அந்தப் பையிலுள்ள பணத்தைத் தொடாமல்

நீ நாற்பது நாள் வைத்திருக்க வேண்டியது. அதற்குள்ளாக அதற்குச் சொந்தக்காரன் ஏற்படாவிட்டால், நீ அதை உன்னுடைய சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்வதே சரி'' என்று காதி சொன்னர்.

8. காணமற்போன பணத்தை மறுபடி பெறுவதற்கு வர்த்தகன் அந்தத் தொகையில் பாதி வரையில் செலவிடச் சித்தமாயிருந்தான். அந்தப் பணம் அகப்பட்டது என்றவுடனே, அவனுடைய மனம் மாறியது. பணம் கிடையாதிருக்கையில் செலவிட மனங் கொள்வதும், பணம் கிடைப்பதாக இருக்கும் போதும், பணம் கிடைத்த போதும் செலவிட மனமிசையா திருப்பதும் அநேகருக்கு வழக்கமாக இருக்கிறது. அது பேராசையின் குணமாகும்.

9. இனும் கொடுப்பதாக ஆசை காட்டியதனுல், மாலுமி அந்தப் பையைச் சொந்தக்காரனுக்குச் சேர்ப்பித்துத் தானும் லாபமடையலாமென்று நியாயமாக எண்ணினன். ஆனுல், வர்த்தகன் பேராசைகொண்டு அநியாயமாக அவனை ஏமாற்றப் பிரயத்தனப்பட்டதனுல், தனக்குக் கிடைக்கக்கூடிய பாதித் தொகையையும் இழந்தான். மாலுமி நியாயத்திற்குக் கட்டுப்பட்டு உண்-

மையாக நடந்ததனால், எதிர்பார்த்திருந்-ததைவிட அதிகமான லாபமடைந்தான்.

10. பேராசைப் படலாகாது. பணம் இல்லாதபோது தாராளமும், பணம் உள்ள போது கையிறுக்கமுங் காட்டக்கூடாது — என்பது இந்தக் கதையின் கருத்து.

## 5. நாணயம்

செண்ட் பீற்றர்ஸ்பர்க்குக்குச் சமீபத்திலு-ள்ள கிராமத்தில் எளிய ஜர்மனிக்காரி ஒரு-த்தி இருந்தாள். அவள் ஜர்மனி தேசத்தி லிருந்து அங்கே வந்து இருந்து கொண்டு, ருஷிய ராஜதானியாகிய செண்ட் பீற்றர்ஸ் பர்க்குக்குப் போகும் கப்பற்காரர்களுக்குச் சாப்பாடு செய்து போட்டு ஜீவனம் பண்ணி வந்தாள்.

2. ஒரு நாள் இரவில் உலாந்தாக் கப்-பற்காரர்கள் பலர் வந்து அவளுடைய வீட்-டில் சாப்பிட்டார்கள். அவர்கள் போன பிறகு, மேஜையின் கீழே பணப்பை ஒன்று முத்திரைபோட்டு வைத்திருப்பதை அவள் கண்டாள். சாப்பிட வந்திருந்தவர்களுள் ஒருவன் அதை வைத்து மறந்து போய் விட்டான்.

178924

3. அவர்கள் கிரான்ஸடாட் என்னும் ஊருக்குக் கப்பலேறிச் சென்றார்கள். அப்போது, காற்று அனுகூலமாக இருந்ததனாலே, அந்தச் சமயத்தை விடக்கூடாதென்னும் அவசரத்தில் அவர்கள் பணப்பையை ஞாபகப்படுத்திக் கொள்ளவில்லை. அந்தப் பைக்குச் சொந்தக்காரன் வருகிற வரையில் அது தன்னுடைய அறைக்குள்ளே கிடக்கட்டுமென்று, அந்தச் சோற்றுக்கடைக்காரி அதை அங்கே வைத்து விட்டாள்.

4. ஏழு வருஷங்கள் ஆயின; ஒருவரும் வந்து அதைக் கேட்கவில்லை. அதிலுள்ள பணத்தை எடுத்து உபயோகிக்கலாமென்று அடிக்கடி தோன்றின போதிலும், அவள் நல்லொழுக்க முடையவளாதலால், அந்தப் பையைத் தொடாமலிருந்தாள்.

5. ஒரு நாள் சாயங்காலம் சில கப்பற்காரர்கள் வந்து, அவள் வீட்டில் சிற்றுண்டி தின்று இளைப்பாறத் தங்கினார்கள். அவர்களுள் மூன்று பேர் அங்கிலேயர், நான்காவதவன் உலாந்தாக்காரன். அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில், "இதற்கு முன்னால் இந்த ஊருக்கு வந்தது உண்டோ?" என்று ஒருவன் உலாந்தாக்காரனைக் கேட்டான்.

6. அதற்கு உலாந்தாக்காரன், "ஆம், நான் இங்கே வந்ததுண்டு. இந்த இடம் எனக்கு மிகவும் நன்ருகத் தெரியும்; இதை நான் மறக்க முடியாது. முன் தடவை இங்கே வந்திருந்ததில், எனக்கு எழுநூறு ரூபாய் நஷ்டமாயிற்று" என்று பதில் சொன்ஞன். "அது எப்படி" என்று அங்கிலேயர் கேட்டார்கள். "எப்படி யெனில், இந்தச் சண்டாளக் குடிசைகளுள் ஒன்றில் அந்தத் தொகையை ஒரு பையோடு வைத்து மறந்து போய் விட்டேன்" என்று உலாந்தாக்காரன் பதில் சொன்ஞன்.

7. அந்த வீட்டுக் கிழவி ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். அவர்கள் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசவே, அவள் அதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் சொல்லிய பதில் அவளுடைய காதில் பட்டவுடனே அவள், "அந்தப் பைக்கு முத்திரை போட்டிருந்ததோ?" என்று கேட்டாள். அதற்கு உலாந்தாக்காரன், "ஆம், இதோ கெடியாரச் சங்கிலியில் தொங்குகிற இந்த முத்திரையினுலே அதைப் பத்திரப்படுத்தியிருந்தேன்" என்று பதில் சொன்ஞன்.

8. கிழவி அந்த முத்திரையை உடனே அடையாளங் கண்டுகொண்டு, அவர்கள் இருந்த அறையை விட்டு மற்றோர் அறைக்குப் போய், அந்தப் பையை எடுத்துக்கொண்டு திரும்பி வந்தாள். "இதோ பார்; நீ நினைக்கிறதுபோல, எல்லாரும் அயோக்கியர்க ளல்லர். நாணய முள்ளவர்களும் சிலராவது இருக்கிறார்களென்று இதனால் தெரிகிறதா?" என்று சொல்லி, அந்தப் பையை மேஜையின் மீது எறிந்தாள். அங்கே வந்திருந்தவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். பைக்குச் சொந்தக்காரன் மிகச் சந்தோஷமடைந்தான்.

9. உலாந்தாக்காரன் பையை எடுத்து முத்திரையை உடைத்துப் பையினின்று ஒரு ரூபாயை எடுத்து, வீட்டுக்காரிக்கு வெகுமதியாக மேஜையின் மீது வைத்தான்; அவள் அந்தப் பையை எடுத்து வைத்துக் காப்பாற்றியதற்காக அவளுக்கு மரியாதையாக வந்தனம் செய்தான். அவன் அவ்வளவு அற்பமான வெகுமதி கொடுத்ததைக் கண்டு மிகுந்த கோபங் கொண்டு, மற்றவர்கள் அவனுடைய இழிகுணத்தை யெடுத்துக் காட்டினார்கள்.

10. "நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்ததற்காக எனக்கு வெகுமதியே

வேண்டாம். இந்த ஒரு ரூபாயையும் திரும்ப எடுத்துக்கொள்” என்று அந்தக் கிழவி உரைத்தாள். ஆயினும், அவள் மிகப் பெருந் தன்மையாக நடந்திருப்பதனால், அவளுக்குத் தகுந்தபடி வெகுமானம் செய்ய வேண்டுமென்று அவர்கள் வாதித்தார்கள். முடிவில், உலாந்தாக்காரன் அவளுக்கு நூறு ரூபாய் இனும் கொடுத்தான்.

பிறர் பொருளை ஆசியாமல் நாணயமாகக் காப்பாற்றிக் கொடுப்பதனால் நன்மையும், மேன்மையும் உண்டாகும்.

## 6. வீண் வீரம் பேசாதே

ஆதி என்னும் சிறுவன் தஞ்சாவூரில் ஒரு பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தான். அவனுடைய தங்கையாகிய ஞானம் என்பவள் அந்த ஊரில் வடக்கு வீதியிலுள்ள பாலிகா பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தாள். அவர்களுடைய வீடு மேலைத் தெருவில் இருந்தது.

2. சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த பிறகு, அவர்கள் இருவரும் கோட்டை மதிலைக் கடந்து அப்பாலுள்ள வெளி நிலங்களில் உலாவப் போவார்கள்.

அங்கே அழகிய தோப்புக்களும் பயிர் நிலங்களும் உண்டு.

3. ஒருநாள் மாலையில் அவர்கள் பயிர் நிலங்களின் இடையில் உலாவிக் கொண்டிருக்கையில், ஆதியென்பவன் தன் தங்கையைப் பார்த்து, "நான் உன்னுடன் கூட இருப்பதனாலே, நீ எங்கே வேண்டுமோயினும் தைரியமாகப் போகலாம்; எதற்கும் அஞ்சவேண்டாம்" என்று சொன்னான். மற்றும், கையிலிருந்த பிரம்பினால் அங்கே முளைத்திருந்த கீரைச் செடிகளின் தலையை அடித்து வீசித் தள்ளிக்கொண்டே அவன், "இப்பொழுது யாராவது திருடர் நம்மை அடிக்க வந்தால், — ஒருவனாக வந்தாலும் சரி, இரண்டு மூன்று பேராக வந்தாலும் சரி—என்ன செய்வேன் தெரியுமா ? இந்தப் பிரம்பினால் ஒரே வீச்சாக — " என்று மேலே சொல்லப் போனான்.

4. அதற்குள்ளாக ஞானம் சரேலென்று கூச்சலிட்டு, "அண்ணா ! இது கோவிற் காளை மேய்கிற நிலமென்பதை மறந்து விட்டேனே ! அதோ பார் ! அங்கே மேய்ந்துகொண் டிருக்கிறது. அது நம்மைப் பார்த்து விட்டதே, என்ன செய்வேன் ?" என்று அலறினாள்.

5. உடனே அந்தக் காளை அவர்களை நோக்கி ஓடிவந்தது; அது கொம்புகளை எதிரே சாய்த்துக்கொண்டு குத்த வருவதுபோ லிருந்தது; வாலை உயரத் தூக்கிக் கொண்டிருந்தது; சிறுவர்கள் இருவரும் அதனைப் பார்த்துப் பயப்பட்டார்கள். ஞானம் மறுபடி, "அண்ணு! என்ன செய்வேன்!" என்று அலறினாள். "ஓட்டம் பிடி, ஓடிப் பிழை" என்று ஆதி அவளுக்குப் பதில் சொன்னான்.

6. இருவரும் ஓட்டம் பிடித்தார்கள். அவர்களால் இயன்ற மட்டும் வேகமாக ஓடினார்கள். சிறிது தூரத்தில் ஒரு மேடு இருந்தது. அதன்மீது ஏறிக்கொண்டு விட்டால், மாடு அங்கே வர முடியாதென்று நினைத்து அவர்கள் அதனை நோக்கிச் சென்றார்கள். ஓடும் வழியில் ஞானத்தின் பாவாடை முள்ளில் சிக்கிக்கொண்டது. "நில்லு, அண்ணு! நில்லு. என் பாவாடை முள்ளில் மாட்டிக்கொண்டுவிட்டது. அதனை விடுவி!" என்று கூவினாள்.

7. அவள் அப்படிக் கூப்பிட்டதற்கு ஆதி பதில் ஒன்றும் சொல்லாமலே ஓடினான். அந்தச் சமயத்தில் எருது உக்காரம்போட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்டு ஆதி திடுக்கிட்டு இன்னும் அதிக விரை-

வாக ஓடினான். ஞானத்திற்குப் பயம் அதிக-மாயிற்று. அவள் பாவாடையை முள்ளி-லிருந்து இழுத்துக் கிழித்துக்கொண்டு ஓடி-னாள். அப்படி ஓடி அவள் அந்த மேட்டுக்-குப் போய்த் தவழ்ந்து மேலே ஏறிக்கொண்-டாள். அவளுக்கு முன்னால் தமையன் அதன் மீது ஏறி நின்றுகொண்டிருந்தான். இனிப் பயமில்லையென்று அவர்கள் இருவ-ரும் பெருமூச்சு விட்டுக்கொண்டு உட்கார்ந்து இளைப்பாறினார்கள்.

8. ஆயினும், அந்தக் காளை அவர்கள் பின்னாலே துரத்திக்கொண்டு ஓடி வந்து மேடையின் கீழ் நின்று அவர்களை அண்-ணாந்து பார்த்தது. அவர்கள் தப்பித்துக் கொண்டு மேலே ஏறிவிட்டார்களென்று நினைத்து மறுபடி உக்காரம் போட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்டு அச்சமுற்று ஆதி என்பவன், "அது அப்படிக் கத்து-கிறதே, அதற்கு அர்த்தம் என்ன? ஏன் கத்துகிறது?" என்றான். திருடர்கள் எதி-ரில் இல்லாதிருக்கையில், "அவர்கள் வந்-தால் வீசிவிடுவேன்" என்று அவன் எவ்வ-ளவு வீரம் பேசினும், காளையைக் கண்டு மிகப் பயப்பட்டான்.

9. அப்பொழுது ஞானம் பயமும் பதற்-றமும் தணிந்திருந்தாள். தமையன் இன்-

128924

னும் பயம் தெளியாமல் அந்தக் கேள்வி கேட்டவுடன், அவளுக்குச் சிரிப்பு வந்து-விட்டது. சிரித்துக்கொண்டு அவள் அவ-னைப் பார்த்து, "அண்ணு! எருது உக்காரம் போடுவதன் அர்த்தம் எனக்குத் தெரிந்தது. 'வீரம் பேசினதனுற் பயனில்லை; உன்னு-டைய வீரத்தனத்தைச் செய்கையிற் காட்டு' என்று சொல்லுகிறதுபோ லிருக்கிறது" என்ருள்.

10. அந்த வார்த்தை ஆதியின் மனத்-திற் சுறுக்கெனத் தைத்தது. "கள்வர்கள் வந்து எதிர்த்தாலும் பயப்பட வேண்டாம்; நான் துணை யிருக்கிறேன். எதற்கும் அஞ்-சாதே" என்று அவன் தங்கைக்குத் தைரி-யம் சொல்லிப் பராக்கிரமம் பாராட்டியதும், உடனே "நீ ஓடிப் பிழை" என்று அவளுக்-குச் சொல்லிவிட்டு எருதுக்குப் பயந்து ஓடியதும், வழியில் அவளை முள்ளினின்று விடுவியாமல், அவள் எப்படியாவது போ-கட்டுமென்று எண்ணி முந்தி யோடியதும் அவனுக்கு ஞாபகமாயின. அவன் வெட்கி, இனி வீண் வீரம் பேசுவதில்லை எனத் தீர்மானித்துக்கொண்டு, தங்கையுடன் திரும்பி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

Printed at the 'Caxton Press.' Madras, E. — 1922.

# சிறுவர்களுக்கான கதைக

| | | | |
|---|---|---|---|
| | ரூ. | அ. | |
| அல்லாவுதீன் ... ... ... | 0 | 2 | 6 |
| மாயூரம்-இடபதீர்த்தம் ... ... | 0 | 2 | 0 |
| மூன்று பரதேசிகள் ... ... ... | 0 | 2 | 0 |
| பால நியாயாதிபதி ... ... ... | 0 | 2 | 0 |
| நைட்டிங்கேல் அம்மையார் ... ... | 0 | 2 | 0 |
| தாளில்லாக் கதவு ... ... ... | 0 | 2 | 0 |
| நாய்காட்டிய நல்லறிவு ... ... | 0 | 2 | 0 |
| கூடுவிட்டுக் கூடுபாய்தல் ... ... | 0 | 2 | 0 |
| மறுபடி முயற்சி செய் ... ... | 0 | 2 | 0 |
| இரட்டைப் பிள்ளைகள் ... ... | 0 | 2 | 0 |
| டிக் உட்டிங்டன் ... ... ... | 0 | 2 | 0 |
| நற்பழக்கம் ... ... ... | 0 | 2 | 0 |
| மாயத் தாமரை ... ... ... | 0 | 2 | 0 |
| மாயப் பொம்மை ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்மயி... ... ... ... | 0 | 2 | 0 |
| இராதா இராணி ... ... ... | 0 | 2 | 0 |
| மூராத் ... ... ... ... | 0 | 2 | 0 |
| திலகவதி ... ... ... ... | 0 | 1 | 6 |
| ஜயேசன் ... ... ... | 0 | 1 | 6 |
| போலிராஜ குமாரன் ... ... ... | 0 | 1 | 6 |
| செம்படவன் ... ... ... | 0 | 1 | 6 |
| கைமன் ... ... ... ... | 0 | 1 | 6 |
| ஈனக் ஆர்டன் ... ... ... | 0 | 1 | 6 |

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
சின்னத்தம்பித் தெரு, சென்னை.

Caxton Press, Madras.

२७२/५२८